Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 7 ஜூலை 2013


தனிப் பிரதி ரூ. 9/-



உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை ( மத்தேயு 6:28)

# ஜூன் மாதம் நடந்த நற்செய்திக் கூட்டங்கள்
## Gospel Meetings Held in the Month of June

சேலம் மாவட்டம் கொங்கணாபுரம்



சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர்




வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை...........1
2. ஏன் நாங்கள்.... 9
3. பெண்கள் பகுதி..............15
4. வாலிபர் பகுதி....................18
5. சிறுவர் பகுதி....................21
6. நிழலும், நிறமும்..............23
7. வசன ரீதியான ...........28


**உங்கள் கவனத்திற்கு**

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030, Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 JULY 2013 Issue - 7

ஆசிரியர் உரை

## தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்

**ஆ**திகாலந்தொட்டு தான்தோன்றித்தனமாக வாழ்ந்து பழகிவிட்ட மானிட வர்க்கத்திடம் "ஆலோசனை" என்ற உயரிய வார்த்தைக்குப் பெரிய மரியாதையோ, வரவேற்போ இல்லையென்பது ஊரறிந்த இரகசியம். தங்களுக்குப் பெரிதாக எதுவும் தெரியாவிட்டாலும், எல்லாம் தெரியும் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் தெரியும் என்ற நினைப்பு பொதுவாக எல்லோருக்குள்ளும் புரையோடிப்போயிருக்கிறது. இப்படிப்பட்ட நினைப்புக்கு விதி விலக்காக இருப்பவர்கள் வெகு குறைவே. இக்கருத்தோடு ஒத்துப் போவதற்குப் பெரிதாக சிரமம் இருக்காது என்று நம்புகிறேன். ஆலோசனை என்ற வார்த்தைக்கான பரவலான பொருள் "புத்திமதி" என்பது. இந்த புத்திமதி யாருக்குமே எதற்கும் தேவையில்லையென்பது யதார்த்த நிலையாக இருந்திருக்குமானால், நம் தமிழ் அகராதியில் "ஆலோசனை" என்ற வார்த்தைக்கே அவசியமில்லாமல் போயிருந்திருக்கும். ஆனால், வேதாகம காலந்தொட்டு இவ்வார்த்தை வழக்கத்திலும், புழக்கத்திலும் இருந்து வருகிற படியால், ஆலோசனையாகிய புத்திமதி மானிடத்திற்கு அவசியமென்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இப்படி மானிடத்திற்கு முற்றிலும் அவசியமாயிருக்கும் ஆலோசனையின் இருப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் பரலோகத்தின் தேவனும், அவருடைய ஏக குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இருக்கிறார்கள். இவ்வுண்மை பற்றி, முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர் என்று வேத அறிஞர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பழம்பெரும் பக்தனாகிய யோபு கூறுகையில், " *அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்?*

*அவருக்குத் தான் ஆலோசனையும், புத்தியும் உண்டு* " (யோபு 12:13) என்று வியந்து கூறுகிறார். மேலும், இயேசு ஆண்டவரின் மானிட பிறப்பு குறித்துப் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்த பழைய ஏற்பாட்டுப் பவுலடியார் என்று போற்றப்படும் ஏசாயா, "*நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத் துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமை யுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும்* " (ஏசாயா 9:6) என்று வர்ணித்திருக்கிறார்.

இன்னும், தேவன் தம்முடைய ஆலோசனையின்படி தான் எல்லா வற்றையும் நடப்பிக்கிறார் என்று பவுலடியார் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். " மேலும், கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி, தமது *சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக* எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்" என்கிறார் (எபே. 1:11,12). இந்த வசனங்களெல்லாம் பரலோக ஆலாசனையின் மகத்துவத்தை நமக்கு எடுத்துரைப்பதாகவே உள்ளன.

இப்படி மகத்துவம் நிறைந்த தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றைத் தான் இயேசுவின் பூலோக வாழ்க்கையின் காலத்தில் வாழ்ந்த யூதர்களின் ஒரு கூட்டத்தார் தள்ளியிருக்கிறார்கள். இது குறித்து லூக்கா நற்செய்தியாளர், "பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்" (லூக். 7:30) என்று கூறியுள்ளார். தள்ளிவிட்டார்கள் என்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், தள்ளுவதால் நேரும் பாதிப்பு என்ன என்பதையும் தெளிவாக்கி விட்டார். அதாவது, தேவ ஆலோசனையைத் தள்ளுபவர்களுக்கு கேடு உண்டாகும் என்று. தேவனிடத்திலிருந்து கேடு வந்தால் தாங்குமா?.

சரி, தொடர்ந்து நாம் மேலே சென்று, தேவனுடைய ஆலோசனையை ஏன் தள்ளிவிடக் கூடாது என்பதை அறிந்து கொள்வதற்கு முன், இப்படி எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பது குறித்து நமது ஆசானின் வழக்கப்படி பார்த்து விடுவோம்.

தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் என்று விளம்பப் பட்ட நாட்கள் இரட்சகராகிய இயேசுவானவர் கலிலேயாவிலும், அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் யூதேயாவிலும் நற்செய்தி அறிவித்துக் கொண்டிருந்த காலகட்டம். இயேசுவானவர் கலிலேயாவின் நாசரேத்து, கப்பர்நகூம், நாயீன் போன்ற ஊர்களில் அநேக அற்புதங்களை நடப்பித்து வல்லமையோடு ஊழியம் செய்து கொண்டிருந்த சமயம் அது. அதன் உச்சமாக, மரித்து, பாடையிலே வைக்கப்பட்டு, அடக்கம் பண்ணுவதற்கு சுடுகாட்டிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட நாயீன் ஊர் விதவையின்

ஒரே மகனை, அந்த விதவையின் கண்ணீரைக் கண்டு, மனதுருகி பாடையைத் தொட்டு, வாலிபனே, எழுந்திரு என்று சொல்லி, அந்தத் தாயிடம் மகனை மீண்டும் ஒப்படைத்தார் (லூக். 7:11-15).

பாடையில் கிடந்தவன் எழுந்து, உட்கார்ந்து, பேசினதைக் கண்ட ஜனங்கள் பயமடைந்து, "*மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றி யிருக்கிறார்* " என்று சொல்லித் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இச்செய்தி காட்டுத் தீ போல மள மளவெனப் பற்றி தேசமெங்கும் பரவியது. வடக்குப் பகுதி யாகிய கலிலேயாவின் எல்லைகளைக் கடந்து தெற்குப் பகுதியாகிய யூதா வுக்கும் வந்து சேர்ந்தது. அந்நாட்களில் யோவான் அங்குதான் ஊழியம் செய்து வந்தார். அவருடைய காதுகளுக்கும் அவருடைய சீடர்கள் வழியாய் இச்செய்தி போய்ச் சேர்ந்தது. அப்பொழுது யோவான் தன் சீடரில் இரண்டு பேரை அழைத்து, "வருகிறவர் நீர் தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று இயேசுவிடம் கேட்டு வரும்படி அனுப்பினார் (லூக். 7:17-20). இயேசுவானவர் இதற்கு நேரிடையாகப் பதிலளிக்காமல், "*நீங்கள் போய், கண்டவைகளையும், கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது*" (லூக். 7:22) என்று சொல்லியனுப்பினார்.

யோவானால் அனுப்பப்பட்ட சீடர்கள் சென்ற பிறகு, தன்னோடிருந்தவர் களிடத்தில் யோவானை வெகுவாகப் புகழ்ந்தார். "*இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவார் என்று தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர்*" (மல்கியா 3:1) இவர் தான் என்று சொன்னதோடு நிற்காமல், "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" (லூக். 7:28) என்ற மாபெரும் உண்மையையும் வெளிப் படுத்தினார். இந்த யோவான் ஊழியம் செய்த நாட்களிலே தான், அவருடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். ஆனால், அதே யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட, பரிசேயரும், நியாய சாஸ்திரி களுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் (லூக். 7:30).

இவ்வசனத்தில், ஞானஸ்நானமானது "தேவனுடைய ஆலோசனை" என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. யோவான் பிரசங்கித்த தேவ ஆலோசனையாகிய ஞானஸ்நானத்திற்கு, பாவி களென்று முத்திரையிடப்பட்ட ஆயக்காரரும், தேவக்காரியங்களில் பெரிதாக ஒன்றும் அறியாதவர்களென்று கருதப்பட்ட சராசரி யூதர்களும் தங்களைக் கீழ்ப் படித்தியிருக்கும் போது, இஸ்ரவேலில் போதகர்களென்று ஏற்றுக் கொள்ளப் பட்டு, முன்னோர்களின் பாரம்பரியத்தில் அபார பிடிப்புக் கொண்டவர்களென்று

அங்கீகரிக்கப்பட்ட பரிசேயர்களும், மோசேயின் பிரமாணங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் என்று நினைக்கப்பட்ட நியாய சாஸ்திரிகளும் ஞானஸ்நான மாகிய தேவ ஆலோசனையை ஆகாதென்று தள்ளிவிட்டார்கள். நிலைமை எப்படியிருக்கிறதென்று பாருங்கள்! தேவ ஆலோசனையைத் தள்ளி விடுவார்கள் என்று எண்ணப்பட்டவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், வேத அறிவு இருக்கிறது. ஆகவே, ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்க்கப் பட்டவர்கள் தள்ளி விட்டார்கள்! இது எப்படியிருக்கு? இதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது நம்முடைய நாட்களிலும் இதுதானே நடக்கிறது என்று சொல்லுகிறீர்களா? அதுவும் சரிதான்.

அன்பானவர்களே, தங்களைப் போதகர்களென்றும், வேதம் அறிந்தவர்க ளென்றும் நினைத்தவர்கள் தேவ ஆலோசனையாகிய ஞானஸ்நானத்தைத் தள்ளி விட்டதைப் பரிசுத்த ஆவியானவர் ஒரு குற்றமாகவே அங்கு குறிப்பிட்டி ருக்கிறார். அப்படித் தள்ளியதன் மூலம் தங்களைத் தண்டனைக்கு ஏதுவானவர் களாக மாற்றிக் கொண்டார்களென்றும் அறிவித்திருக்கிறார். அப்படியானால், எதற்காக இந்த அறிவிப்பு? நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவ ஆலோசனை யைத் தள்ளி, தண்டனைக்கு ஏதுவானவர்களாக மாறிவிடக்கூடாது என்பது தானே அதன் நோக்கம். நாம் புரிந்து செயல்படத் தயாரா?

இப்பொழுது, நம்முடைய வாழ்க்கையில், நாம் ஒவ்வொருவரும் எந்த வொரு தேவ ஆலோசனையையும் ஏன் தள்ளிவிடக்கூடாது என்பதற்கான ஒரு மூன்று காரணங்களை இங்கே பார்க்கலாம்.

### I *மனிதனுடைய வழிகள் போதுமானதல்ல*

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தகாது என்பதற்கான காரணங் களில், முதலாவதாக நாம் தெரிந்து கொள்வது, மனிதனுடைய வழிகள் நமக்குப் போதுமான தல்ல என்பது.

மனிதர்களுக்கு சக மனிதர்களின் ஆலோசனை ஒருபோதும் தேவையில்லை என்று வேதாகமம் ஒருபோதும் சொல்லுவதில்லை. ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் கூறும்போது, "ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்" (நீதி. 11:14) என்று கூறியுள்ளார். இங்கே சொல்லப்படும் ஆலோசனை, மனிதர்களின் சுக வாழ்வுக்கு மனிதர்களால் தங்களுடைய அறிவைக் கொண்டும், அனுபவத்தைக் கொண்டும் கொடுக்கப் படும் ஆலோசனைகள். இந்த ஆலோசனையை ஒருவன் தள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம். ஏற்படும் பாதிப்பு நன்மையாக இருந்தாலும், தீமையாக இருந்தாலும் சரீர வாழ்வோடு முடிந்து போகும். ஆனால், நம்முடைய தலைப்பில் இடம் பெற்றிருப்பது மனிதர்களின் அடுத்த வாழ்வுக்குத் தேவையான தேவ ஆலோசனை. இந்த ஆலோசனையைத் தான் ஒருவன் தள்ளக்கூடாது என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஏனெனில், மனிதனுடைய ஆலோசனைகளும், வழிகளும் மனிதனு டைய இம்மையின் வாழ்வுக்கும், மறுமையின் வாழ்வுக்கும் போதுமானதல்ல.

எரேமியா தீர்க்கனுடைய நாட்களில், தங்கள் வாழ்வுக்குத் தங்கள் வழிகளே போதுமென்ற நினைப்போடு மக்கள் வாழ்ந்தார்கள். அங்கே தீர்க்கன் கூறும் வார்த்தைகளை கவனியுங்கள். "*கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல வென்றும் அறிவேன்*" (எரே. 10:23). மேலும், நீதி மொழிகள் புத்தகம் இதைவிட அழுத்தமான பொருளில் மனிதனுடைய வழிகள் பற்றிப் பேசுகிறது. "*மனுஷ னுக்குச் செம்மையாயத் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்*" (நீதி. 14:12) என்று. மனிதனுடைய ஆலோசனையின் தன்மையும், வழி களின் இலட்சணமும் இதுவாக இருக்கும் போது, நாம் தேவ ஆலோசனையை ஏற்றுக் கீழ்ப்படிய ஏன் தயங்க வேண்டும் அல்லது மறுக்க வேண்டும்?

சிலுவைக்கு முன்னால், யோவான் ஊழியம் செய்த நாட்களில் ஞானஸ்நானம் தேவ ஆலோசனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சிலுவைக்குப் பின்னால், இயேசு பரமேறுவதற்கு முன்பாக, அதே ஞானஸ்நான மானது ஒரு கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆம், பிரதான கட்டளை யின் ஊடே ஞானஸ்நானம் இடம் பெற்றிருக்கிறது. " *ஆகையால், நீங்கள் புறப் பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்* " என்று (மத். 28:19,20) ஆலோசனைக்கும, கட்டளைக்குமுண்டான வேறுபாடு உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். (1 கொரி. 7:6) ஆலோசனைக்குக் கீழ்ப்படியாவிட்டாலே "கேடு" என்றால், கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால்? சும்மா விடுவாரா தேவன்? ஆகவே, தேவ காரியங்களில் ஜாக்கிரதை மிகவும் அவசியம்.

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய பூமிக்குண்டான வாழ்வுக்கும், பரலோக வாழ்வுக்கும் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆலோசனைகள் எதுவாக இருந்தாலும், "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்ற சாமுவேல் பிள்ளையாண்டானின் மனநிலையைப் பெற்றவர்களாய், "ஆயக்காரர்களைப் போல" நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்போடு பக்தி வாழ்க்கையை நடத்தி, கடிந்து கொள்ளு தலுக்கு ஆளான பரிசேயர்கள் போலும், நியாயசாஸ்திரிகள் போலும் நாம் மாறிவிடக் கூடாது.

## II *போவதற்குப் போக்கிடம் எதுவுமில்லை*

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தாகாது என்பதற்கான காரணங் களில், இரண்டாவதாக நாம் தெரிந்து கொள்வது, பரலோகத்தின் தேவனையும், இரட்சகர் இயேசுவையும் தவிர வேறுவழியில்லை என்பது.

பொதுவாக, எந்த ஒரு காரியத்திற்கும் மாற்றுவழி என்று ஒன்று இருக்கு மானால் போதாத நேரத்தில் அதை நாம் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால், வேறு எவுதுமே இல்லை, இருப்பது ஒன்றே ஒன்று தான் என்ற நிலை காணப் படுமானால் அதை ஏற்றுக் கொள்வது தானே புத்திசாலித்தனம். அதைத்தானே

அறிவுள்ள ஒருவன் செய்ய வேண்டும். இந்த உண்மையைத்தான் இயேசுவின் சீடர்கள் ஒரு கட்டத்தில் அறிக்கையிட்டார்கள்.

ஆம், ஒரு சமயம் இயேசுவானவர் தன்னைப் பின்பற்றின திரளான சீடர்களிடம், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" என்று கூறி (யோவான் 6:51) அதன் விளக்கமாகப் பல காரியங்களை எடுத்துரைத்தார். அப்பொழுது அவருடைய சீடரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, *இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்று சொன்னதோடு, அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கியும்* போனார்கள். (யோவான் 6:60-66). அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி; நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்திரமாக ஆண்டவரே, "*யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்*" என்றான் (யோவான் 6:66,68).

நம்முடைய மறுமையின் வாழ்வுக்கு வழிகாட்டும் நித்திய ஜீவ வசனங்கள் இயேசுவினிடத்தில் இருக்கிறபடியால் இயேசுவைத் தவிர வேறு எங்கும் போக முடியாது. இதே உண்மையைத் தான் பேதுரு மற்றொரு சமயத்தில் இப்படியாக வெளிப்படுத்தியுள்ளார். "*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை*" என்றார் (அப். 4:12). எபிரெயர் ஆசிரியர் இதையே வேறொரு கோணத்தில் எங்ஙனம் எடுத்துரைக்கிறார் என்று பாருங்கள். "*சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்....*" என்றுள்ளது (எபி. 10:26). மனிதர்களின் பாவங்களுக்கான ஒரே பலி இயேசுக் கிறிஸ்து தான். மனிதர்களின் பாவங்களுக்காகச் செலுத்துவதற்கு வேறொரு பலியும் இல்லை, நித்திய வாழ்வுக்கு இயேசுவைத் தவிர வேறு வழியும் இல்லை. இது குறித்து இயேசு ஆண்டவரே, "*நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்*" (யோவான் 14:6) என்று சொல்லி விட்டாரே.

மேலும், பவுலடியார் தீமோத்தேயுவிற்கு எழுதும்போது, சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று கூறுகிறார். (1 தீமோத். 4:8). அதாவது, தேவனுடைய வார்த்தைகளின் மூலம் வருகின்ற "தேவ பக்தியானது" இம்மைக்கும், மறுமைக்கும் போதுமானதாக உள்ளது என்று.

ஆக, அருமையானவர்களே, தேவனும் அவருடைய வார்த்தைகளும், தேவனும், அவருடைய குமாரனின் காரியங்களும் இம்மைக்கும், மறுமைக்கும்

போதுமானவைகளாக இருக்கும்போது, தேவன் நமக்குக் கொடுக்கும் ஆலோசனையை நாம் ஏன் தள்ள வேண்டும்? இப்பூமியிலே நாம் தனி நபராகவும், குடும்பமாகவும், சபையாகவும் வாழ்வதற்கான ஆலோசனை களைத் தமது ஆவியானவர் மூலமாகத் தாராளமாகவும், ஏராளமாகவும் தந்திருக்கிறார். அத்தோடு மறுமையை என்றென்றும் அவரோடு எப்படிக் கழிப்பது என்பதற்கான ஆலோசனைகளையும் தந்திருக்கிறார். ஆகவே, அவை களை நாம் எக்காரணம் கொண்டும் தள்ளாமல், அவைகளுக்கு நம்மை சமூலமாக ஒப்புக்கொடுத்து வாழ்வது அவசியம்.

## III *தண்டனை கடுமையாக இருக்கும்*

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தாகாது என்பதற்கான காரணங் களில், மூன்றாவதாக நாம் தெரிந்து கொள்வது, தண்டனை கடுமையாக இருக்குமென்பது.

நம்முடைய தலைப்பு இடம் பெற்றிருக்கும் வேத வசனம், "....பரிசேயர் களும், நியாயசாஸ்திரிகளும் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவ ஆலோசனை யைத் தள்ளி விட்டார்கள்" என்று கூறுகிறது. அதாவது, அப்படித் தள்ளியதால் தேவ தண்டனை அவர்களுக்கு உண்டு என்று கூறுகிறது. தேவன், ஆதியிலி ருந்தே தான் சொல்லுகிறபடி மனிதன் செய்கிறானா என்பதைக் கவனிக்கிற வராகவே இருக்கிறார். அப்படிச் செய்யாத பட்சத்தில் தண்டிக்கிறவராகவும் இருக்கிறார். இந்த அணுகு முறையை அவர் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பித்துவிட்டார். ஆதாம், ஏவாள் தம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படியாமல் போனபோது, அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி இருக்கிறார் (ஆதி. 3:23,24).

அடுத்து, மோசேயின் நாட்களில், தேவன் கொடுத்த ஓய்வு நாள் பிரமாணத் திற்கு எதிராக, இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரத்தில் இருந்த போது ஒரு மனிதன் விறகு பொறுக்கி விட்டான். அவன் விறகு வெட்டவில்லை, வெறுமனே பொறுக்கினான். அவ்வளவு தான். ஆனாலும், அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? பாளையத்திற்குப் புறம்பாக்கப்பட்டு கல்லெறிந்து கொல்லப்பட்டான். (எண். 15:32,36). இன்னும், சிலுவைக்குப் பின்னான புதிய ஏற்பாட்டுக் காலத்தில், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகப் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் இருவரும் அடுத்தடுத்து மரித்துப் போனார்கள். (அப். 5:5,10). தேவனுடைய ஆலோசனைகளுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் அவர் எவ்வளவு முக்கியத்துவம் தருகிறார் என்று இதன் மூலம் விளங்குகிறதா, இல்லையா? சொல்லுங்கள்.

இந்த உண்மைகளையெல்லாம் எபிரெயர் ஆசிரியர் அறிந்தபடியால் தான், ஆவியானவரின் துணை கொண்டு அந்நூலின் வாசகர்களுக்கு எச்சரித்துப் புத்தி சொல்லியிருக்கிறார். "*.....அடையாளங்களினாலும், அற்புதங் களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின் படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்துமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளு வோம்* " என்று (எபி. 2:4). இந்நூலின் ஆரம்பத்தில் இப்படிச் சொல்லுகிறவர்,

இதன் நிறைவுப் பகுதிக்கு வரும்போது, "*பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயத்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே*" என்கிறார் (எபி. 10:31).


அன்பானவர்களே, இந்த வசனங்களையெல்லாம் கவனிக்கும்போது பயமாக இல்லையா? ஆம், பயமாகத்தான் இருக்கிறது என்று சொல்லு வோமானால் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், அவருடைய வார்த்தை களுக்கும், அவருடைய வழிகளுக்கும் நாம் என்ன மரியாதை கொடுக்கி றோம்? என்னுடைய பக்தி காரியங்கள் தேவ ஆலோசனைப்படி அமைந்திருக் கிறதா, என்னுடைய பக்தி வாழ்க்கை தேவ வார்த்தைகளுக்கு ஒத்து வருகிறதா, என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை புதிய ஏற்பாட்டிலுள்ள கிறிஸ்துவின் உபதேசப்படி இருக்கிறதா என்று நாம் எப்பொழுதாகிலும் எண்ணிப் பார்க்கி றோமா? சொல்லுங்கள்.

தேவக் காரியங்களைத் தள்ளிவிட்டு நாம் தப்பித்துவிடலாம் என்று எண்ணி நாம் ஏமாந்து போய்விட வேண்டாம். "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்". (2 கொரி. 5:10). ஆகையால், இந்த உண்மையைப் புரிந்து தேவக் காரியங்களுக்கு, குறிப்பாக தேவ ஆலோசனைகளுக்கும், கட்டளைகளுக்கும் நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்த முடிவெடுப்போம்!

பரலோகத்தின் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## பாடுகள் தரும் பாடங்கள்

1. கிறிஸ்தவர்கள் பாடுகளை புதுமையென்று எண்ணக்கூடாது (1 பேதுரு 4:12; 2 தீமோத். 3:12)
2. எத்தனை அதிகமாக பாடுகள் இருக்கிறதோ அத்தனை அதிகமாய் மகிழ்ச்சியும், மகிமையும் இருக்கும் (1 பேதுரு 4:13; ரோமர் 8:17,18).
3. பாடுகளுக்கு ஒரு கிறிஸ்தவன் சரியான முறையில் பதிலளிக்கும் போது அதுவே மருந்தாகும். (எபி. 12:6–11)
4. பாடுகளினால் நம் வாழ்வில் காரியங்கள் நன்மைக்கேதுவாக நடந்தேறும் (ரோமர் 8:28)
5. தேவன் தம்முடைய பிள்ளைகளை சோதிக்கும்படியாக அவர்கள் மீது தீங்கைக் கொண்டு வருவதில்லை (யாக். 1:13; எபி. 6:18).



# ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

இந்த நாகரீக காலத்தில், சாத்தான் இருப்பதாக ஒருவன் ஏன் நம்ப வேண்டும் என்று சிலர் ஆச்சரியப் படலாம். மனிதன் விண்வெளிக்குச் செல்கின்ற இந்தக் காலகட்டத்தில் நிச்சயமாகவே பிசாசு போன்றவைகள் எல்லாம் எடுபடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி வாதம் செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். தேவன், கிறிஸ்து எப்படி இருக்கிறார்களோ அப்படியே பிசாசும் இருக்கிறான். அவன் உலக முழுவதிலும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எங்கும் தெரிகிறது. அவனுடைய செல்வாக்கு ஒவ்வொருவரிடத் திலும் காணப்படுகிறது. அதுமட்டுமல்ல, அவன் உலகத்தில் இருக்கிறான் என்று வேதாகமம் போதிக்கிறது. அவன் மனிதனல்ல, ஆனால், அவன் ஒரு ஆவி, அசுத்த ஆவி. தேவனும், கிறிஸ்துவும் எதற்கு அடையாளமாக இருக்கிறார்களோ, அதற்கு நேர் எதிரானவன். தவறான மற்றும் கெட்டவைகளுக்கு பின்னால் அவன் எப்போதுமே இருக்கிறான். அவன் பிசாசு என்றும், துன்மார்க்கன் என்றும், பொய்க்குப் பிதா என்றும், இந்தப் பிரபஞ்சத்தின் தேவன் என்றும் அழைக்கப் படுகிறான். அவன் அந்தகாரம், பாவம் மற்றும் துக்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். அவன் மரணத்தை உண்டாக்கி, நித்திய அழிவைக் கொண்டு வருகிறான். அவன் நம்முடைய சத்துருவாக இருக்கிறபடியால், அவனைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். நாம் அவனை எந்த அளவுக்கு அறிந்து, அவன் கிரியைகளைப் புரிந்து வைத்திருக்கிறோமோ, அந்தளவுக்கு அவனை எதிர்க்க நாம் நம்மை ஆயத்தமாக்க முடியும். இதற்கேற்ற அறிவும், முறையான போராயுதமும் இல்லையானால், அவனால் நம்மை வஞ்சித்து, மேற்கொண்டு அழித்துப் போட முடியும்.

இப்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குப் போய், சாத்தானைப் பற்றியும், அவனுடைய கிரியைகள் பற்றியும் பேசுகின்ற சில வசனங்களை வாசிப்போம். இயேசு, நிலத்தின் களைகள் பற்றிய உவமையை விளக்கும் போது, களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் என்றும், அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு என்றும் சொன்னார் (மத். 13:38,39).

பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். " *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்* " (I பேதுரு 5:8). பவுல் சாத்தானை சோதனைக்காரனாகச் சொல்கிறார். ஆகையால், "நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்க தாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினேன் " (I தெச. 3:5). இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதப்பிரிவினர், கர்த்தர் பெயெல்செபூலின் வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினார் என்று குற்றஞ்சாட்டினார்கள். " *அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான் ; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்க தாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசு களின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறா னேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து; அவர்களை நோக்கி : தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்தி ருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத்தானே பிரிவினை செய்கிறதாயி ருக்குமே ; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானு டைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளை யிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம், என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க் காதவன் சிதறடிக்கிறான்* " (மத். 12:23-30) என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய யோவான் இவ்விதமாக எழுதினார், " *பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக் கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததி னாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்* "(I யோவான் 2:14). யோவான் தொடர்ந்து இப்படியாகச் சொல்கிறார், " *நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த*

*காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனை கொலை செய்தான்; தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே* " (I யோவான் 3:11-13). "*மறுபடியும் யோவான், தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யா னென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான் ; பொல்லாங்கன் அவனைத் தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோ மென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந் திருக்கிறோம்* " என்று (Iயோவான் 5:18,19). பின்பு வெளிப்படுத்தின விசேஷத் தில் யோவான், *உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்* " என்று (வெளி. 12:9). மேலும், பிசாசுக்கு என்ன நடந்தது என்பதை விவரிக்கும் போது, யோவான் "*ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன்; பிசாசென்றும் சாத்தா னென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறை வேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான் என்றான், அதற்கு பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும்* " (வெளி. 20:1-3) என்றான்.

கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சிலரைப் பார்த்து, " *நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினு டைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும், பொய்க் குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான், நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியி னாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை* " (யோவான் 8:44,45). இயேசு தம்முடைய சீஷர்களிடம் இதைச் சொன்னார். " *இனி நான் உங்களுடனே அதிக மாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை* "(யோவான் 14:30). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, "*எங்கள் சுவிசேஷம் மாற பொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும். தேவனுடைய சாயலிலி ருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்* " (I கொரி. 4:3,4) என எழுதினார்.

ஆனால், இந்த சாத்தான் எங்கே இருந்து வந்தான்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றையும் உண்டாக்கினது தேவனாயிருக்கிபடியால்

(ஆதி.1:1) இந்த சாத்தானையும் அவனோடுச் சேர்ந்த எல்லா தேவதூதர் களையும் உண்டாக்கினது தேவனே. பிசாசு தன்னைத்தான் உயர்த்தி, தன்னை உண்டாக்கினவருக்கு எதிராக கலகம் செய்து, தேவனுடைய சத்துருவாக மாறினான். II பேதுரு 2:4 இவ்விதமாய்ச் சொல்கிறது "*பாவஞ் செய்த தூதர் களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலி களினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து*" என்று. மேலும் பேதுரு, தேவன் யாரையெல்லாம் தப்பவிடவில்லை என்று சொல்கிறார். இங்கே கருத்து என்னவென்றால், நாம் தேவனையும் அவருடைய சித்தத்தை யும் எதிர்த்தால், அதற்கான விளைவை நாம் அனுபவிக்க வேண்டியதாயி ருக்கும். யூதா 6 ஆம் வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம். "*தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்*". நியாயத் தீர்ப்பு நாளிலே கிறிஸ்து துன்மார்க்கரைப் பார்த்து இவ்விதமாகச் சொல்வார். "*சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக் காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்*" (மத். 25:41) என்று.

படைப்பின் ஆரம்ப காலத்திற்கு நாம் திரும்பும் போது, ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த பிறகு, ஏதேன் தோட்டத்தில் அவர்களை வைத்து, தோட்டத்திலிருக்கிற சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்க லாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். இதன் மூலம், விலக்கப்படும் கனியைப் புசித்தால் அவர்கள் சாகவே சாவார்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இப்போது நாம் வாசிப்போம் "*தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகலகாட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியை யும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர் களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்*

*பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும், அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் "* (ஆதி. 3:1–13).

விலக்கப்பட்ட கனியைப் புசித்த அந்த நாளிலே மனுஷனும், மனுஷியும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்து விட்டார்கள். ஆனால், தேவன் தொடர்ந்து ஆதாம், ஏவாள், சர்ப்பம் மற்றும் எல்லா சிருஷ்டிகளின் மீதும் சாபத்தை சுமத்திக் கொண்டிருந்தார். மத்தேயு நான்காம் அதிகாரத்தில், சோதனைக்காரனான சாத்தானே கிறிஸ்துவிடம் வந்தான். அவர் இயேசு தன்னைப் பார்த்துக் கொள்ளும்படி மூன்று வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் இயேசு தனக்குப் பணிந்து போகும்படி முயற்சி செய்தான். ஆனால், ஒவ்வொரு முறையும் கிறிஸ்து *"எழுதியிருக்கிறதே"* என்பதாக பதில் அளித்தார். இறுதியில், பிசாசு தோற்றுப் போனவனாக அவரை விட்டுப் போனான்.

சாத்தானின் மீது இயேசு பெற்ற மிகப்பெரிய வெற்றி கல்லறையிலிருந்து அவர் உயிரோடு எழுந்ததுதான் ; இயேசு உயிரோடு எழுந்ததின் மூலம் தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்தது மட்டுமல்ல, எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை சாத்தியப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதலை நிச்சயப்படுத்தினார். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாயிருக்கிற யாவரையும் அவர் இரட்சித்து, எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள அவர்களுக்கு உதவி செய்து, கடைசியாக பரலோகத்திற்கு அவர்களை அழைத்து செல்வார் என்கின்ற வாக்குத்தத்தம் இருக்கிறது.

என் நண்பர்களே, சாத்தானை பழைய பிசாசை உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களைக் கொண்டு சாத்தான் உங்களை வசப்படுத்திக்கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களாகிய மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவைகளை சாத்தான் உங்களுக்கெதிராகப் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தவறான மதம்,

மனுஷனுடைய போதனைகள் போன்றவைகளைப் பயன்படுத்தி சாத்தான் உங்களை வழிவிலகிப் போகச் செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம், சத்தியத்தின் அழகையும், நித்திய ஜீவனின் வழியையும் விவரிக்கிறது. அதே நேரத்தில், முடிவான மரணத்தை கொண்டு வருகின்ற சாத்தானின் தந்திரத்தையும், வஞ்சகமான வழிகளையும் குறித்து எச்சரிக்கிறது.

சாத்தானுக்கு விரோதமாக எச்சரிக்கையாயிருங்கள். அவனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள், படியுங்கள். கர்த்தரையும், அவருடைய வழிகளையும் கற்றுக் கொள்ளுங்கள். அதே வேளையில், உங்கள் எதிராளியாகிய சாத்தான் பற்றி வேதவசனங்களிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பிதாவாகிய தேவனிடத்திலும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வையுங்கள். *"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்"* (எபி. 11:6).

நாம் தேவனை விசுவாசித்தால், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14:1–3). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி சாத்தானிடமிருந்தும், பாவங்களிடமிருந்தும் எல்லா தவறான, மோசமான காரியங்களிடமிருந்தும் திரும்ப வேண்டும். எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (அப். 17:30). நாம் மனந்திரும்பவில்லையென்றால் கெட்டுப் போவோம் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (லூக். 13:3). கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நாம் அறிக்கை செய்ய வேண்டும் (மத். 10:32). நாம் மனுஷருக்கு முன்பாக கர்த்தரை அறிக்கை செய்தால், அவர் நம்மை பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்வார். கடைசியாக, நம் பாவமன்னிப்பிற்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாகச் சொல்கிறார் (மாற்கு 16:16). நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால் பாவமன்னிப்பைப் பெறுவோம் என்று பேதுரு கொள்கிறார் (அப். 2:38). நாம் அதைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப். 2:47). இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்போம் (II கொரி. 5:17). இவைகளை செய்தால், நாம் ஒருபோதும் சாத்தானுடையவர்களாக இருக்கமாட்டோம்; ஆனால் கிறிஸ்துவினுடையவர்களாயிருந்து கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டு (I பேதுரு 4:16) மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து பரலோக வீட்டை பெற்றுக்கொள்வோம் (வெளி. 2:10; வெளி. 22:14).

பெண்கள் பகுதி

# தாய்மார்களே! உங்கள் வருமானத்திற்கு விலையாக நீங்கள் எதைக் கொடுக்கிறீர்கள் தெரியுமா?

**Sis. RACHEAL NAYAGAM**

காலங்கள் எவ்வளவாய் மாறிவிட்டது! முன்நாட்களில் பெரும் பாலான குடும்பங்கள் கிராமங்களி லும், சொந்தமான தோட்டங்களிலும் தங்களுடைய உறவுகள் சூழ இருக்க குடியிருந்து வந்தார்கள். அநேக குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்தன.

பொருளாதாரப் பிரச்சனை தங்களை நெருக்கினபடியால் அநேக இளம் தம்பதிகள், பிழைப்பைத் தேடி பட்டணங்களில் குடியேறினார்கள். அப்படிப் போனவர்கள் பட்டண வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வசதி இல்லாமல் நெருக்கப்பட்டார்கள். அநேகர் பெண் களின் சமத்துவம், பெண்ணுரிமை போன்ற நவீன கொள்கைகளால் கவரப்பட்டார்கள். அதன் விளைவு இன்று உலககெங்கும் அதிக எண்ணிக்கையிலான இளம் மனைவிகள் குடும்பங்களை விட்டு வெளியில் சென்று பணிபுரிய ஏது வாகியது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. குடும்பத்தாரைப் போஷிப் பதற்கு, அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்கு கூடுத லான வருமானம் அவசியமா என்று பரிசீலிக்காமலே, மனைவி வெளியே சென்று வேலை செய்யத் துவங்கி, தற்போது இரண்டு வருமானத்தில் குடும்பம் நடத்தப் பழகிவிட்டார்கள். இது ஒரு மோச மான தவறு. ஏனெனில், இரண்டு வருமானத்தில் குடும்பம் நடத்திப் பழகி விட்டு, பிறகு ஒரு வருமானத் தில் வாழ்க்கை நடத்துவது கிட்டத் தட்ட முடியாத காரியம்.

இந்த நிலையில் ஒரு குழந்தை பிறக்கிறது. இப்பொழுது மனைவி என்ன செய்கிறாள்? இன்றைக்கு உலகம் முழுவதும் பின்பற்றப்படும் ஒரு தவறான பழக்கத்தை தானும் செய்கிறாள். அதாவது, தன்னுடைய கூடுதலான வருமானத்தை விட்டுவிட மனதில்லாமல் பெற்ற குழந்தையை தாத்தா, பாட்டிமார்களிடமோ அல்லது பிள்ளை வளர்ப்பு மையத்திலோ விடுகிறாள். கணவன்-மனைவியாக இருக்கும் பொழுதே இரண்டு சம்பளத்தில் செலவு செய்து பழகி விட்டபடியால், ஒரு குழந்தை பிறந்து குடும்பம் பெரிதாகும் பொழுது - செலவுகள் கூடும்பொழுது இனி தாயின் வருமானம் தவிர்க்க முடியா தது என்ற ஒரு பொய் சமாதானம் ஏற்படுகிறது.

பெற்ற தாய் தன்னை பேணி வளர்க்காமல் விட்டுப் போவது, பாவம் அந்தக் குழந்தைக்குத் தெரி யாது. குழந்தைகள் இன்னும் பெரி தாகி தன்னுடைய உதவி அவசியம் என்ற நிலை வரும்போது- பொரு ளாதார நிலையும் அனுமதித் தால் - வீட்டிலிருந்து கொள்ளலாம் என்று தாய் நினைக்கிறாள்.

ஆனால், சிறு குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சியின் கருத்து வித்தியாசமாக உள்ளது. குழந்தை பிறந்தது முதல் தாயின் மூலம் தனக்குக் கிடைக்கும் அன்பு, மனோநிலை, பாதுகாப்பு போன்றவற்றிற்கும் இவைகள் இல்லாத நிலைக்கும் ஒரு வேறுபாட்டைக் காட்டுகிறது. ஒரு குழந்தையின் முதல் வயது, அதனுடைய சரீர பலத்திற்கும், மனநிலை பாதுகாப் பிற்கும் மிகவும் முக்கியமானது என்று மருத்துவர்கள் இப்போது உணர்கின்றனர். இந்த பருவத்தில்தான் பந்தம்–உறவு என்பவைகள் ஏற்படுகிறது. ஆக, இத் தருணத்தில் தாயானவள் குழந்தையின் அருகே தொடர்ந்து இருந்து, அன்பு பொழிதல், பாசம் காட்டுதல், முறையான கவனிப்பு போன்றவற்றில் சரியான கவனம் செலுத்தினால், குழந்தையானது மகிழ்ச்சியானதாகவும், மனோ ரீதியாக சமச்சீர் பொருந்தினதாகவும் இருக்கும்.

இந்த வகையாகக் கவனிக்கப் படாமல், மற்றவர்களின் பொறுப் பிலும், குழந்தை வளர்ப்பு மையங் களிலும் விடப்படும் குழந்தைகள் அடிக்கடி நோய் வாய்ப்படுகிறவைகளாகவும், சுற்றுபுறச் சூழலுக்கு ஒத்துப்போகாத மனநிலையுடையதாகவும் இருக்கும். இதைக் குறித்து நாம் ஆச்சரியப்படத் தேவை யில்லை. ஏனெனில், அதிக குழந்தைகள் உள்ள இடத்தில் ஒவ்வொரு குழந்தையையும், அதற்கேற்ற வகையில் பராமரிக்க ஆயாக்களுக்கு நேரமும், பொறுமையும் இருக்காது.

சில சூழ்நிலைகளில், தாயானவள் வெளியே சென்று வேலை செய்வது தவிர்க்க முடியாதது என்பது உண்மையே. ஒருவேளை கணவன் இறந்து போயிருக்கலாம் அல்லது உடல் ஊனமுற்றிருக்கலாம் அல்லது குடும்பத் திற்கு தேவையான ஆகாரம் கொடுக்க முடியாமல் குறைந்த வருமானமுள்ளவராக இருக்கலாம். வேறு வழியே இல்லாத இக்குடும்பங்கள் பரிதாபத்திற்குரியவையே. இப்படிப்பட்ட குடும்பங் களில் உள்ள பெரியவர்கள், தாத்தா– பாட்டிமார்கள் குழந்தை வளர்ப்பிலே போதுமான உதவி செய்தால், அக் குழந்தைகளுக்கு, பெற்றோர் இல்லாத சூழ்நிலையில் ஏற்படும் குறையை ஓரளவு நிறைவு செய்ய முடியும்.

இன்றைக்கு அநேக குடும்பங் களில் என்ன நடக்கிறது? அநேக தாய்மார்கள் தங்கள் குடும்பத்திற்கு அவசியமில்லாத, ஆடம்பரமான பொருள்களை வாங்க வேண்டுமென் பதற்காகவும், தன்னுடைய அதிக மான வருமானத்தை கணவன் விரும்புகிறார் என்பதற்காகவும் வேலைக்குச் சென்று கொண்டுள்ள னர். அவள் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயும், அவள் பெற்ற தன்னுடைய சொந்தக் குழந்தையின் நலனி லிருந்து உறிஞ்சப்படுகிறது என்பது தான் உண்மை. பெற்ற பிள்ளைகளை விலையாகக் கொடுத்து பொருள்களை வாங்குகிறாள். பண வசதியோடு வாழ்கிறாள்.

பெற்றோர் இருவருமே வீட்டிற்கு வெளியில் வேலை செய்து மாலை வேலைகளில் வீடு வரும் பொழுது களைப்பாகவும், வேலை செய்யும் இடத்துச் சூழ்நிலையில் எரிச்சலாகவும் வருவார்கள். குழந்தைகள் அவர்களுடைய வருகையால் களிகூர்ந்து எழுப்பும்

கூச்சலைக் கூட கவனிப்பதற்கு மன மிருக்காது. உணவு சமைப்பது, துணி துவைப்பது, சுத்தம் செய்வது, குழந்தை கள் படிப்பை கவனிப்பது போன்ற வற்றிற்கும், குழந்தைகளை அணைத் துப் பாசத்தோடு வளர்ப்பதற்கும் நேரமிருக்காது. ஒவ்வொருவரு டைய வாழ்க்கையிலும் அன்றாடம் நிகழும் காரியங்களைப் பேசவும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வும், ஒழுக்க ரீதியான காரியங் களையும், ஆவிக்குரிய காரியங் களைப் போதிக்கவும் முடிவதில்லை. இவைகள் அனைத்தும் ஒரு குடும்பத் திற்கு அவசியமானவைகள்.

மேலைநாடுகள் என்றழைக் கப்படும் மேற்கத்திய நாடுகளை கவனித்தால் இன்றைய நாகரீகப் பெற்றோர்கள் செல்லும் பாதை எவ்வளவு பரிதாபகரமானது என்பது தெரியும். இரண்டாம் உலகப் போருக் குப் பிறகு, வேலைக்குச் செல்லும் அமெரிக்கத் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண் டே போகிறது. குழந்தைகளோடு இருக்க வேண்டிய மொத்தத் தாய்மார் களில், பாதிக்கு மேலானோர் வேலைக்குச் சென்று விடுகின்றனர். அதன் விலை என்ன தெரியுமா? வேலை செய்யும் தாய்மார்களின் சராசரி எண்ணிக்கை அதிகமாவதைப் போலவே, விவாகரத்து, குடும்பச் சீரழிவுகள், மனோரீதியான பிரச்சனைகள், குற்றங்கள், குறிப்பாக குழந்தைப் பருவ குற்றங்கள் போன்ற வையும், இன்னும் மனிதனுக்குத் தெரிந்த பலவிதமான சமுதாயப் பிரச்சனைகளும் அதிகரித்துக் கொண்டுள்ளது.

ஒருவேளை இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், மேற்சொன்ன அநேக சமூகப் பிரச்ச னைகளுக்கு குடும்பங்கள் சீரழிந்து போவது தான் பிரதான காரணம். அது தாய்மார்கள் தேவன் தங்களுக் குக் கொடுத்த, நல்ல மனைவியா யிருத்தல், குடும்பத்தை பராமரித்தல், சிறந்த தாயாக இருத்தல் போன்றவை களில் தங்களுடைய நேரத்தையும், பெலனையும் செலவழிக்காமல், சம்பாதிக்கும் விஷயத்தில் ஆணோடு சரிநிகர் போட்டி போடுவதாலும் ஏற்படும் விளைவே.

மீதி இருக்கிற உலகமானது சொல்ல முடியாத துயரங்களிலிருந் தும், அழிவிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென் றால், அமெரிக்க தேசத்தில், இம்முறை யைப் பின்பற்றியதால் வந்த விளைவு களிலிருந்து எச்சரிப்புப் பெற்றுக் கொள்வது நல்லது.

தேவன் சொல்கிறார், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத் திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தி யுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்ல வர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப் படிகிறவர்களுமாய் இருக்க வேண்டும்.... (தீத்து. 2:4,5). தேவ ஞானத்தைக் காட்டிலும் நாம் மேம் பட்டவர்களல்ல. திருமணத்தையும், பெற்றோராயிருக்கும் ஆசீர்வாதத் தையும், குடும்பத்தையும் தேவன் திட்டமிட்டார். அவை வெற்றிகரமாக இயங்க எது தேவை, எது சிறந்தது என்பது அவருக்குத் தெரியும். அன்பும், பக்தியும் நிறைந்ததாய் தன்னுடைய குடும்பத்தை மாத்திரம் பராமரிக்காமல், ஓட்டுமொத்த மானிடத்தின் நலனுக்கும் துணை புரிகிறாள்.

பெண்கள் இதைவிடச் சிறந்த ஒரு வேலையைச் செய்ய முடியாது. தேவன் விரும்பும் குடும்ப வாழ்வை வாழ தேவன் நமக்கு உதவி செய்வாராக!.

வாலிபர் பகுதி

# மனோதத்துவமா தேவ சத்துவமா?

**Bro. Benny Martin**

பிரியமான வாலிபக் கண்மணிகளுக்கு கர்த்தராகிய இயேசுவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக, பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ, நண்பர்களை யோ, தெரிந்தவர்களையோ நேரில் காணும்போதோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போதோ நலம் விசாரிக்கிறோம். பெரும்பாலும் நாம் உடல் நலனைப் பற்றித்தான் விசாரிக்கிறோம், மனநலனைப் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக் கிறார் என்பதற்கான அடையாளமோ, அளவுகோலோ அல்ல. ஒருவருடைய மனநலம் நன்றாக இருக்கும் போது மட்டுமே அவர் முழுமையான ஆரோக்கிய முள்ள மனிதனாக மாறுகிறார். இன்றைய நாட்களில் பலர் குடும்பச் சூழல், சுற்றுச் சூழல் மற்றும் வேலைச் சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர் களாகக் காணப்படுகின்றனர். இச்சீர் குலைந்த சமுதாயம் இவர்களை சமமாக நடத்தாமல், இவர்களோடு நெருக்கமாகப் பழகாமல் வெறுக்கிறது. உடல் நலம் குன்றிவிட்டால் மருந்து, மாத்திரைகள் என பலவழிகள் உண்டு. ஆனால், மன நலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன் வழியை வேதாகமத்தில் வைத்திருக் கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச் சிறந்த புத்தகம் வேதாகமம் தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் மனித வாழ்க்கைக்கான வழிகாட்டிப் புத்தகமாகத் திகழ்கிறது. நாம் எப்படி ஒரு வீட்டு உபயோகப் பொருளைப் பற்றிய முழுமையான விவரத்தை அறிந்து கொள்ள வழிகாட்டி புத்தகத்தை பார்க்கிறோமோ அதேபோல் நம்மைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேதாகமத்தைப் பார்க்க வேண்டும். மனித நலனுக்காக தேவன் வேதாகமத்தில் வைத்திருக்கும் காரியங்களை விட தத்துவ ஞானிகளின் கைவசம் அதிக தத்துவங்கள் இருக்கிறது என்று யாரும் பெருமைப் பாராட்ட முடியாது. அதுவும் குறிப்பாக பிலிப்பியர் நிருபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை விட மனித நலனுக்கான வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

பவுல் இந்நிருபத்தைத் தனக்கு பொருளாதார நன்மைகளை கொடுத் தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்துவதற்காக எழுதி னார் (பிலி. 1:4,5; 4:18). அந்தச் சபையார் எப்பாப்பிரோதீத்து மூலமாக பொருளாதார உதவிகளை சிறையிலிருந்த பவுலுக்குக் கொடுத்தனுப்பி னார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையைப் பற்றிய கூடுதல் தகவல்களையும் கொண்டு வந்தார். அந்த பட்டணத்து சபையார் பவுலின் சிறை வாசத்தைக் கேள்விப்பட்டு அதிகமாக கவலைப்பட்டார்கள் (1:30). பவுல் தனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏது வாயிற்றென்று அவர்களுக்கு தெரியப்படுத்தினதின் மூலமாக அவர்களை

ஆறுதல்படுத்தினார். அவர்கள் தன்னைப் பற்றி கவலைப்படுவதை விட்டு விட்டு தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபட வேண்டும் என்பதற்காகப் பவுல் அவர்களை அவ்விதமாக ஆறுதல்படுத்தினார். அவர்கள் தேவ சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டிய காரியங்களை பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். இதிலிருந்து நாம் மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளை கற்றுக்கொள்ளலாம்.

**I. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும் :**

இது மனரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றியுள்ளவனாயிருக்கப் பல காரணங்கள் உண்டு. நமக்காகக் கிறிஸ்து செய்த தியாகம் இவ்வுலகில் அதைவிட முக்கியமான ஒன்று வேறு எதுவுமில்லை என்கிற முடிவை எடுக்க நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் பெரும்பாலும் உலகக் கவலைகளும், மனச்சோர்வுகளும் நம் மகிழ்ச்சியை மங்கச் செய்ய அனுமதித்து விடுகிறோம். இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்ச கட்டத்திற்குச் செல்லும்போது மனோதத்துவ நிபுணர்கள் அவர் சிரித்து மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே பரிசுத்த வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் நாங்கள் புதிதாக கண்டுபிடித்து விட்டோம் என்று மெச்சிக்கொள்ள ஒன்றுமில்லை.

**II. நம் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிய வேண்டும்.**

"சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" என்று மலைப்பிரசங்கத்தில் நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார். கோபப்படுவது, எரிச்சலடைவது, பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்வதெல்லாம் உலகத்தாருடைய குணாதிசயங்கள். இவைகள் நம் சரீர உறுப்புகள் பாதிப்படைய காரணமாகின்றன. கோபப்படுவதினால் உடலில் அழுத்தம் அதிகமாகி அது பல்வேறு நோய்களுக்கு வழி வகுக்கின்றன. கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் (பிலி. 4:11). நம் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்து அவர்கள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். நாம் எதற்கும் பதட்டப்படாமல், கோபப்படாமல் சாந்தமாக இருக்கவேண்டுமென்று தான் மனோத்தத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் அதாவது இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்று தான்.

**III நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் இருக்க வேண்டும்**

இது மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற்பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில் அழையா விருந்தாளியாக வந்து நம்மை நிலைகுலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையான வைகள் எவை என்பது நம்மை விட தேவனுக்கு நன்றாகத் தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய

நீதியையும் தேடும் போது தேவைகளை தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மத். 6:25-34). உலகக் கவலைகள் நம்மை நெருக்கும் போது தேவ காரியங்களில் நாம் திரும்பி கவனத்தைச் செலுத்து வோம். தேவ காரியங்கள் என்று வரும்போது நாம் தேவனுடைய வசனங் களை தியானிக்கலாம், நோயாளிகளைப் போய் சந்திக்கலாம், தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யலாம் இவ்விதமாக பட்டியல் நீண்டு கொண்டே யிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும் போது ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேத வசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனை களைத்தான் எதிரொலிக்கிறது.

**IV நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனிடத்தில் தெரியப்படுத்த வேண்டும்.**

பிரியமான வாலிபர்களே, நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம், உறவினர்களிடம் தெரிவிக்கி றோம். அதனால், தீர்வு உண்டாவதில்லை. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்க விளைவுகளை ஏற்படுத்துகிற, நம் ஆத்துமாவை அதலப் பாதாளத்தில் தள்ளுகின்ற தீர்வாகத்தான் இருக்கிறது. மனோத்தத்துவ ரீதியாக நம் கவலை களை, பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கி வைக்காமல் பிறரிடம் பகிர்ந்து கொள்வது, தெரியப்படுத்துவது பாரத்தை குறைக்கும் என்று சொல்லப் படுகிறது. ஆனால், யாரிடம் தெரியப்படுத்துகிறோம் என்பது முக்கியம். சில வேளைகளில் நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரிவிக்கும்போது அது மற்றுமொரு மிகப் பெரிய பிரச்சனைக்கு வழி வகுத்து விடுகிறது. எனவே தான், நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும் (பிலி. 4:6). நாம் ஜெபத்தின் மூலமாக நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனுக்கு தெரியப்படுத்தும் போது நல்ல தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் பாரம் இறங்கி விடுகிறது. நவீன மனோ தத்துவம் ஒருவர் தியானத்தில் ஈடுபடுவது அவருடைய மனநலத்திற்கு இன்றியாமையாதது என்று சொல்கிறது. ஆனால், மனித உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் தேவையானவைகளை தேவன் வேத வாக்கியங்களில் ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டார்.

பிரியமான வாலிபக் கண்மணிகளே! இன்றைய நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாகப் பேசப்படும் விஷயமாக இருக்கிறது. மன நலத்தை மேம்படுத்த மனோதத்துவ நிபுணர்களை நோக்கி ஆட்டு மந்தையைப் போல் படையெடுத்துச் செல்லும் இந்த நாட்களில் மனித மன நலத்திற்காக, அதன் மேம்பாட்டிற்காக தேவன் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத் திருக்கின்ற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்படும், நம் ஆத்துமாவுக்கு தேவையான ஆகாரமும் தங்கு தடையின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் (III யோவான் 2).


சிறுவர் பகுதி

# கேட்கும் காது (EAR)

Dr. ABEL R. NAYAGAM

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சிறுபிள்ளைகளாகிய உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். உங்கள் வகுப்பில் ஆசிரியர் கற்றுத்தரும் பாடங்களை, நீங்கள் "கேட்டு" கற்றுக் கொள்ளுகிறீர்கள். அப்படித்தானே? சரி, இந்த மாதம், ஆசிரியர் சொல்லும் வார்த்தைகள் எப்படி உங்களுக்கு கேட்கிறது என்று நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

காதைப் பிரிக்கலாம். வெளிக்காது, நடுக்காது, உள்காது என்று. வெளிக் காது சுமார் 2.5 செ.மீ. நீளம் உள்ளது. இது வழியாகத்தான் சத்தம் உள்ளே செல்கிறது. வெளிக்காது உள்ளிருக் கும் மற்ற பகுதிகளுக்கு பாதுகாப்பும் தருகிறது. நடுக்காதில் "ஸ்டெபிஸ்" (Stepes), "இன்கஸ்" (Incus), "மேலியஸ்" (Malleus) என்று பெயர். இந்த வெளிக் காதுக்கும் நடுக் காதுக்கும் இடையில் "சவ்வு" என்று நாம் கூறும் "டிம்பானிக் மெம்ப்ரேன்" (Tympanic membrane) உள்ளது.




முதலில் காதின் உள் உறுப்புக் களைப் பற்றித் தெரிந்து கொள்வோம். சரியா? நமக்கு வெளியில் தெரிகின்ற காதுக்கு "பின்னா" (Pinna) / "ஆரிக்கிள்" Auricle என்று பெயர். இங்கு ஆரம்பித்து மூன்று பாகங்களாக நாம்

இதைத் தாண்டி உள் காதில் "காக்லியா" (Cochlea) என்ற எலும்பு உண்டு. இது "நத்தை" (snail) போன்ற உருவம் உடையது. (படத்தில் காண்க). இந்த காக்லியா மூலம் தான் காதுக்கும், மூளைக்கும் தொடர்பு ஏற்படுகிறது.

சரி, இப்பொழுது உங்களுக்குப் புரியும்படி சொல்கிறேன். உங்கள் ஆசிரியர் கூறும் காரியங்கள் காற்று வழியாக "பின்னா/ ஆரிக்கிள்" வந்தடைகிறது. இங்கிருந்து உள்ளாக இருக்கும் "டிம்பானிக் மெம்பரேன்" -ஐ அது தட்டி, அங்கு மாறுகிறது. இந்த அதிர்வு நடுக்காதில் உள்ள மூன்று சிறிய எலும்புகள் வழியாகக் கடந்து காக்லியாவைச் சென்றடைகிறது. காக்லியாவில் இந்த அதிர்வுகள் மின்சாரமாக மாறி கடைசியாக அது மூளையில் செயல்பட்டு உங்களுக்குக் கேட்கிறது. அடேயப்பா! என்ன ஒரு ஆச்சரியம்!! ஒருவர் சொல்லும் வார்த்தையை கேட்பதற்குள் இவ்வளவு காரியங்கள் நடக்கிறதா? பிரமிப்பாக உள்ளதே என்று நினைக்கத் தோன்றுகிறது தானே? ஆம் நீங்கள் நினைப்பது சரிதான்.

உண்மையாகவே, இது ஒரு ஆச்சரியமான நிகழ்வு தான். நம்மைச் சுற்றி எப்பொழுதும் சத்தம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அதினால் நம்முடைய இருதயம் போல இதுவும் ஓய்வில்லாமல் உழைக்கும். ஓர் உறுப்பு. சங். 139:4ல் " நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் " என்று சங்கீதக்காரன் தாவீது எழுதியிருப்பதைப் படித்திருக்கிறீர்களா? அந்த பிரமிப்பின் ஒரு பகுதி தான் நம்முடைய கேட்கும் காது. தாவீது எழுதியிருப்பதைப் படித்திருக்கிறீர்களா? அந்த பிரமிப்பின் ஒரு பகுதிதான் நம்முடைய கேட்கும் காது. ஆம் பிள்ளை களே! எவ்வளவு உண்மை.

நம் தேவன் சகல வல்லமைகளையும் உடையவர். அவர் சிருஷ்டிக்காமல் இது போன்ற பிரமிக்கத்தக்க காரியங்கள் ஒருபோதும் நிகழ்ந்து விடாது.

இதை அறிந்த நீங்கள் சங்கீதக்காரன் போல் தேவனைத் துதியுங்கள், நன்றி செலுத்துங்கள். அப்படிப்பட்ட தேவன் தான் நம்முடைய தேவன் என்று பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள். அவருக்கு பயந்து வாழுங்கள். இச்சிறு பிராயத்திலிருந்தே அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் பெரிய காரியங்கள்

1. நமக்கு விரோதமாக குற்றம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும் (லூக். 17:1,4)
2. எந்தச் சூழ்நிலையிலும் நம் சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் (மத். 5:43,44)
3. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும் (1 தீமோத். 4:12)
4. உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் சுவிசேஷத்தை அறிவியுங்கள் (மாற்கு 16:15,16)
5. மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருங்கள் (வெளி. 2:10)

# நிழலும், நிஜமும்

## (The Shadow and the Reality)

**Bro. J.H. James Rajakumar**

அன்பானவர்களே!

சென்ற மாதத்தில் புதிய உடன்படிக்கையை கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்த வேண்டுமென்று தேவன் திட்டம் பண்ணினதையும், அப்படியே இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்தினதையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த மாதத்திலும் புதிய உடன்படிக்கையின் முக்கியத்துவம் குறித்தும் உறுதிப்பாடு குறித்தும் ஆசீர்வாதங்கள் குறித்தும் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

### I நம்மைப் படைத்த பிதாவாகிய தேவன் சொன்னது;

a) இயேசு கிறிஸ்துவே அவருடைய நேசக்குமாரன் (மத். 3:17)

b) கிறிஸ்துவுக்கே செவி கொடுக்க வேண்டும் (மத். 17:5)

c) இந்த கடைசி நாட்களில் (கிறிஸ்துவின் காலத்தில்) குமாரன் மூலமாக மட்டும் நமக்கு, இந்த உலகத்திற்கு பேசுகிறார் (எபி. 1:1,2)

d) சகல அதிகாரத்தையும், தேவன் கிறிஸ்துவுக்குத்தான் கொடுத்தார், மற்ற யாருக்கும் அல்ல (மத். 28:18)

e) தேவன் எல்லா தீர்க்கதரிசிகளைக் கொண்டும் கிறிஸ்துவைப் பற்றியே பேசினார் (அப். 3:24).

f) எல்லாருக்கும் நித்திய ஜீவனை அளிக்கும் பொறுப்பை கிறிஸ்துவிடமே தேவன் அளித்திருக்கிறார் (யோவான் 17:2)

g) அதற்காகவே தேவன் நித்தியமான உயிர்த்தெழுதலை கொடுத்து கிறிஸ்துவை எழுப்பினார் (அப். 3:15)

### II நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவானவர் பழைய ஏற்பாடு அல்ல புதிய ஏற்பாடே உகந்தது என்று சொன்னார்:

a) பழைய ஏற்பாடு நிறைவேற்றப்பட்டால் அது முடிந்து போகும் என்று சொன்னார் (மத். 5:17,18)

b) எல்லாவற்றையும் முடித்துவிட்டார், நியாயப்பிரமாணத்தையும் முடித்து விட்டதினால் வேத வாக்கியம் நிறைவேறும்படி முடிந்தது என்றார் தமது சிலுவையில் (யோவான் 19:28; எபேசி. 2:15)

c) ஆகையால், அவர் வாழ்ந்த நாட்களில் இரண்டு உடன்படிக்கைகளையும் (பழையது, புதியது) ஒன்றாக சேர்க்கக்கூடாது என்று திட்டமாக போதித்தார் (மத். 9:16,17).

d) கிறிஸ்துவை விசுவாசித்த யூதர்களை நோக்கி, கிறிஸ்துவின் உபதேசத்தைக் கைகொள்ள வேண்டுமென்று போதித்தார் (மத். 9:16,17)

e) கிறிஸ்துவின் உபதேசம் என்பது புதிய உடன்படிக்கை ஆகும். அநேகா் யோவான் 6–ம் அதிகாரம் வசனங்கள் 48–63 கர்த்தர் பந்திக்காக பயன் படுத்துவார்கள். ஆனால், இயேசுவானவர் 63–ம் வசனத்தில் ஆவியே உயிர்ப்பிக்கிறது என்பது புதிய உடன்படிக்கையையே குறிப்பிடுகிறார் (யோவான் 6:63; ரோமர் 8:2; 2 கொரி. 3:6) அப்போஸ்தலரான பவுல் இயேசு கிறிஸ்துவால் போதிக்கப்பட்டபடியினால் (கலாத். 1:11,12). கிறிஸ்து வானவர் போதித்த அதே கருத்தை பவுலும் மேற்கண்ட வசனங்களில் போதிக்கிறார். இதைக் குறித்து விவரமாகக் கீழே கவனிப்போம்.

f) கிறிஸ்துவானவர் தம் இரத்தத்தைச் சிந்தி புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார் என்று முன்னுரைத்தார். (மத். 26:27,28) இதில் பரிபூரணமான பாவமன்னிப்பு கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே அதாவது புதிய உடன்படிக்கையின் மூலமாகவே வருகிறது என்பது தெளிவாகிறது.

g) இன்னும் அநேக இடங்களில் கிறிஸ்துவானவர் தம்முடைய மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல் பரமேறி செல்லுதல் இராஜ்யம், சபை இவைக ளைப் பற்றி பேசுகிறார். புதிய உடன்படிக்கையின் கீழ் நடைபெறும் நிகழ்வு களாகும். கிறிஸ்துவின் சுவிசேஷம், இராஜ்யம், கிறிஸ்துவின் இரத்தத்தி னாலே உருவாகும் சபை, கிறிஸ்துவின் ஆளுகை இவை அனைத்தும் கிறிஸ்துவின் காலமாகிய புதிய உடன்படிக்கையின் (ஏற்பாட்டின்) காலத்தில் நிகழும் அம்சங்களாகும். இவைகள் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை களாகும். இதில் பழைய உடன்படிக்கைக்கு வேலையோ தொடர்போ இல்லை என்பது உறுதி (மத். 6:21; 26:63,64).

h) இந்த சம்பவங்களில் சாட்சிகளாயிருந்து அவைகளை வேதாகம எழுத்துக்களாக பதிவு செய்த அப்போஸ்தலர் கூட இவைகளுக்கு உறுதியான சான்றுகளாயிருக்கிறார்கள். ஏனென்றால், நாம் பயன்படுத்துகிற வசனங்கள் பரிசுத்த ஆவியினாலே உறுதி செய்யப்பட்டு அவர்களால் எழுதப்பட்ட வசனங்கள் ஆகும்.

## III *அப்போஸ்தலனாகிய பவுல் இதைப்பற்றி தன் நிருபங்களில் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் கவனிப்பது மிகவும் பிரயோஜனமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.*

a) ரோமர் புத்தகத்தில் : அநேக இடங்களில் நியாயப்பிரமாணத்தின் பெலவீனமும், கிறிஸ்துவின் காலத்தில் அது தேவையற்றது என்று தெளிவுப்படுத்துகிறார்.

i) ரோமர் 3:20,21 வசனங்களில் "இப்படியிருக்க நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது என்கிறார். தேவ நீதியை அடையும்படி ஒருவன் நீதிமானாகும்படி நியாயப்பிரமாணம் அவசிய மில்லை. கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை போதும் என்கிறார். இதை கீழான வசனங்களிலே உறுதிப்படுத்துகிறார். (ரோமர் 3:22–28)

ii) நியாயப்பிரமாணத்தினாலே பாவம் தான் சுட்டிக்காட்டப்பட்டதே தவிர இரட்சிக்கும் கிருபை அளிக்கவில்லை என்று (ரோமர் 5:13,15) விளக்குகிறார்.

iii) ரோமர் 7:1-4-ல் அவர் பெரும் விளக்கம் கொடுக்கிறார். நியாயப் பிரமாணம் என்னும் உடன்படிக்கைக்கு (புருஷனுக்கு) மரித்து கிறிஸ்து வின் உடன்படிக்கைக்கு (புருஷனுக்கு) நாம் பிழைத்திருக்கிறவர்களாயிருக் கிறோம். இதற்காக அவர் திருமண பந்தத்தை சுட்டிக்காட்டுகிறார். ஒரே நேரத்தில் ஒரு பெண்ணுக்கு இரு கணவரை திருமண உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்த முடியுமா? அப்படிச் செய்தால் அது விபச்சாரம். ஒரு பெண் இரு ஆணை ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொள்ள முடியாது என்பதைப் போல நாமும் ஒரே நேரத்தில் புதிய உடன்படிக்கையையும், பழைய உடன்படிக்கையையும் கைக்கொள்ள முடியாது என்பதை விளக்கு கிறார். அப்படிச் செய்வது ஒரு வகையில் விபச்சாரம் ஆகும்.

iv) ரோமர் 8:1,11 வசனங்களை நன்றாக கூர்ந்து கருத்தோடு வாசியுங்கள். இந்த வசனங்களில் ஆவி என்று சொல்லுகிற இடங்கள் ஏன் புதிய உடன் படிக்கையை குறிப்பிடுவதாக இருக்கக்கூடாது. ஆம் புதிய உடன்படிக்கை யையே குறிப்பிடுகிறது. ஏனென்றால், மாம்சத்திற்கு சம்பந்தப்பட்ட பிரமாணம், ஆவியின் பிரமாணம் என்று வரையறுத்துச் சொல்லப்பட்டிருக் கிறது. நியாயப்பிரமாணம் மாம்ச சிந்தையை அதிகரிக்கும் பிரமாணம் தான் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் உபா. 28:1,14-ல் சொல்லப்பட்டவைகள் அனைத்தும் பூமிக்குரிய வாழ்க்கையில் கிடைக்கும் நன்மைகளே தவிர பரலோகத்தின் நன்மைகள் இல்லை. விபரமாக பேச இப்பொழுது சமய மில்லை. ஆகவே கொரிந்தியர் நிருபத்திற்கு கடந்து செல்லுவோம்.

b) கொரிந்தியருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது (பரிசுத்த ஆவியானவர் எழுதும்போது) நம்முடைய பழைய நம்பிக்கையையே உடைத்தெரிகிறார். நானும் கூட முதல் முதலில் 2 கொரி. 3ம் அதிகாரம் சரியான அர்த்தம் மற்றும் விளக்கத்தோடு படிக்கும்போது அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தேன். உலகக்கல்வியில் தங்களைத் தேறினவர்களாக சொல்லிக் கொள்ளுகிற நாமகரண பாஸ்டர்கள் ஏன் இதை புரிந்து கொள்ள முடியாமல் மற்றவர்களுக்கு தெளிவாக போதிக்க முடியாமல் இருக் கிறார்கள் என்று அவர்களைக் குறித்து ஆதங்கப்பட்டேன். ஏனென்றால், நானும் ஏற்கனவே ஒரு பிரபலமான நாமகரண கூட்டத்தை சேர்ந்தவனா யிருந்தேன் என்பதற்காக வெட்கப்படுகிறேன். எனவே தான், இந்த கட்டுரையின் மூலம் ஒரு சிறு விளக்கத்தையாகிலும் அப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்களா என்று எழுதிப் பிரயாசப்படுகிறேன். மக்களை என் பக்கம் இழுக்க வேண்டும் என்பது என் நோக்கமல்ல. கிறிஸ்துவின் பக்கம் இழுக்க வேண்டும் என்பதே என் நோக்கமா யிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலும் இதே நோக்கம் உடையவராக இருந்திருக்கிறார். சுருக்கமாக சொல்ல முயலுகிறேன்.

i) 2 கொரி. 3:6-ல் அவர் தன்னை பழைய உடன்படிக்கைக்கு அல்ல புது உடன்படிக்கையின் ஊழியக்காரராக திட்டமாகச் சொல்லுகிறார். கிறிஸ்துவே பவுலை புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர் ஆக்கினார். பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு பழைய ஏற்பாட்டுக்கு ஊழியம் செய்தார். ஆனால், அவர் இரட்சிக்கப்பட்ட பிறகு புதிய ஏற்பாட்டிற்கு மட்டும் ஊழியக்காரரானார். அவர் இரண்டு உடன்படிக்கைகளையும் ஒன்றாகக் கலக்கவில்லை. மேலும், அவர் சொல்லுகிறார்.

ii) புதிய உடன்படிக்கை ஆவிக்குரிய சட்டங்களாயிருக்கிறது. மேலும், அவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்து சொல்லும் போது "எழுத்து சொல்லுகிறது" என்கிறார். இங்கே எழுத்து என்பது 2 கற்பலகைகளில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தை (பழைய ஏற்பாட்டை) குறிப்பிடுகிறார். நியாயப் பிரமாணம் எல்லோருக்கும் சாபத்தைத்தான் கொண்டு வந்தது. அதினாலே அவர்கள் உலகப்பிரகாரமாக பணக்காரர்களாக இருந்தாலும் ஆவியிலே செத்தவர்களாக இருந்தார்கள்.

"ஆவியோ உயிர்ப்பிக்கிறது புதிய உடன்படிக்கை அனைவருக்கும் கிருபை யையும், மன்னிப்பையும், ஜீவனையும் கொடுக்கிறது" என்கிறார்.

iii) 2 கொரி. 3:7,8 வசனங்களில் இதை உறுதி செய்யும்படி நியாயப்பிரமாண ஊழியத்தை ஒழிந்து போகிற ஊழியம் என்றும், புதிய ஏற்பாட்டின் ஊழியத்தை அதிக மகிமையுள்ள ஊழியம் என்றும் விவரிக்கிறார்.

iv) 2 கொரி. 3:9-ல் பழைய ஏற்பாட்டு ஊழியம் ஆக்கினையை கொடுக்கிற ஊழியமாகவும், புதிய ஏற்பாட்டு ஊழியம் நீதியை கொடுக்கும் ஊழிய மாகவும் சொல்லுகிறார்.

v) 2 கொரி. 3:10-16-ல் பழைய ஏற்பாடு முக்காடு போட்டுக் கொண்ட நிலை யையும், கிறிஸ்துவின் பிரமாணத்தினால் அந்த முக்காடு நீக்கப்பட்ட நிலை யையும் விவரிக்கிறார். விவரமாக பேச சமயமில்லை.

vi) 2 கொரி. 3:16,17-ல் கர்த்தருடைய ஆவி (புதிய உடன்படிக்கை) எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. தேவனுடைய சாயலைக் காட்டுகிற உடன் படிக்கை புதிய உடன்படிக்கையே, கிறிஸ்துவின் சுவிசேஷமே ஆகும்.

vii) 2 கொரி. 4:1-ல் இப்படிப்பட்ட ஆவிக்குரிய மகிமையுள்ள ஊழியத்தை நாங்கள் செய்வதால் சோர்ந்து போவதில்லை என்று நம்மை உற்சாகப் படுத்துகிறார். ஏனென்றால், நம்முடைய ஊழியத்தில் அநேக கஷ்டங்கள் வருகிறது. ஆனால், அதனால் வரும் நன்மையை நினைக்கும் போது அந்த கஷ்டமெல்லாம் கண நேரத்தில் மாயமாய் மறைந்து போகிறது. அடுத்தது, கலாத்தியர் நிருபத்திற்குச் செல்வோம்.

c) நாம் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலே அப்போஸ்தலர் நடபடிகள் 15-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எருசலேம் கூட்டத்தைப் பற்றி விவர மாகப் படித்தோம். அந்தக் கூட்டம் முடிந்தவுடன் நிருபத்தைப் பெற்றுக் கொண்டு (அப். 15:22-29) திரும்பி அந்தியோகியாவுக்குச் சென்று

கலாத்தியா நாடுகளில் பரவியிருந்த சபைகளுக்கு எழுதிய நிருபம் தான் கலாத்தியர் நிருபம் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். ஆகையால், மற்ற நிருபங்களை விட கலாத்தியர் நிருபத்தில் பவுலினுடைய அறிவுரைகளும் ஆவேசமும் அதிகமாகக் காணப்படுகிறது. அவர் கிறிஸ்துவினிடத்தில் சத்தியத்தை கற்றுக் கொண்டதை உறுதி செய்த பிறகு பழைய ஏற்பாட்டை கடைப்பிடிக்க முற்படுகிறவர்களை சாடுகிறார்.

i) கலா. 2:4-ல் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்குகிறவர்கள் கள்ளச் சகோதரர் என்று சாடுகிறார்.

ii) கலா. 2:16-ல் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை. அதாவது, பரலோகம் போக முடியாது என்று எச்சரிக்கிறார்.

iii) கலா. 2:18-ல் நான் இடித்துப்போட்டவைகளை (பழைய ஏற்பாட்டு ஊழியம்) மீண்டும் கட்டினால் நானே குற்றவாளியாக இருப்பேன் என்று அஞ்சுகிறார்.

iv) கலாத். 2:19-ல் நியாயப்பிரமாணத்திற்கு தன்னை மரித்தவராக கருதும் போது அதை எப்படி கடைபிடிக்க முடியும் என்று தன் நிலை விளக்கத்தை தருகிறார்.

v) கலாத். 2:21-ல் தேவ நீதியை நியாயப்பிரமாணத்தினாலே (பழைய உடன் படிக்கையினாலே பெற முடியுமானால் கிறிஸ்துவானவர் உலகிற்கு வர வேண்டியது, பாடுபடவேண்டியது, மரிக்க வேண்டியது அவசிய மில்லையே யோசித்துப் பாருங்கள் என்று நம்மை நன்றாக யோசிக்க வைக்கிறார்.

vi) கலாத். 3:1-ல் புத்தியில்லாத கலாத்தியரே ஆங்கிலத்தில் "O Foolish Galations" என்று எழுதுகிறார். ஒரு பரிசுத்தவானால் இதை விட அதிகமான வார்த்தைகளால் அவர்களை கடிந்து கொள்ள முடியாது. மேலும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய சத்தியத் தையும் மாத்திரம் உங்களுக்கு போதித்தேன். உங்களை யார் மயக்கினவன்? என்று கேள்வியெழுப்புகிறார்.

vii) கலா. 3:2-ல் நியாயப்பிரமாணத்தினால் நீங்கள் ஆவியைப் பெறவில்லை. விசுவாசத்தை கேள்விப்பட்டதினாலே ஆவியைப் பெற்றீர்கள் என்று திட்ட மாக சொல்லுகிறார். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அநேக நாமகரண கூட்டத்தைச் சார்ந்த நண்பர்கள் நியாயப்பிரமாணச் சட்டங்களை கைகொள்கிறவர்களாயிருந்தும் தங்களை ஆவிக்குரியவர்களாக எண்ணிக் கொள்கிறார்களே இது உண்மையா என்றால் அது நிச்சயம் பொய்தான். நியாயப் பிரமாணச் சட்டங்களைக் கைகொள்கிறவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என்று இந்த வசனம் அவர்கள் தலையில் சம்மட்டியால் தலையில் அடிக்கிறது.

viii) கலா. 3:3-ஐ பாருங்கள் ஆவியிலே (புதிய ஏற்பாட்டின்படி அல்லது கிறிஸ்துவின் உபதேசத்தின்படி) வாழ்க்கையை ஆரம்பித்த நீங்கள்

இப்பொழுது மாம்சத்திலே (பழைய ஏற்பாட்டிலே) முடிவு பெற போகிறீர் களா? எனக்கேட்கிறார். இதன் அர்த்தம் இப்படியும் சொல்லலாம். பரலோகத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்த நீங்கள் இப்போது நரகத்தை நோக்கி ஓட ஆரம்பித்து விட்டீர்களா? என்பது ஆகும்.

ix) கலா. 3:4-9-ல் விசுவாச வாழ்க்கையில் சரியாய் ஓடின நீங்கள் இப்போது தடம் மாறி ஓடுவது சரியா என்பதை யோசித்து பாருங்கள் ஏனென்றால்,

x) கலா. 3:10-13-ல் நியாயப் பிரமாணம் யாரையும் நீதிமானாக்கவில்லை. மாறாக எல்லாரையும் சாபம் உள்ளவர்களாக மாற்றியது. ஆகையால், கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்க லாக்கி நம்மை மீட்டுக் கொள்ளுகிறார் என்கிறார். இது எப்படியிருக்கிறது என்று சொன்னால் புதை குழியில் விழுந்து விட்ட ஒருவரை மீட்டு கரையில் சேர்த்தவுடன் மீண்டும் அவராகவே சென்று புதை குழியில் விழுந்துவிட்டதைப் போல இருக்கிறது. ஆகவே, அப்போஸ்தலரான பவுல் அந்த மக்களைக் குறித்து ஆதங்கப்படுகிறார். கிறிஸ்துவின் புதிய உடன் படிக்கையின் மூலம் சுவிசேஷத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு ஆவியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருந்த நீங்கள் இப்பொழுது ஏன் சாபத்திற்குள் விழுந்து விட்டீர்கள். அதாவது, நியாயப்பிரமாணத்தை ஏன் கைகொள்ளப் போகிறீர்கள் என்று ஏங்குகிறார்.

xi) கலாத். 3:14-29 வரை வாசிக்கும்போது நியாயப்பிரமாணம் (பழைய ஏற்பாடு) வருவதற்கு முன்பு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் மூலமாக இந்த உலகத்திற்கு வரப்போகிற ஆசீர்வாதங்கள் பற்றியும் தேவன் திட்டமாக முன்னுரைத்தார். இதைப்பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். ஆபிரகாமுக்கு தேவன், கிறிஸ்துவைப் பற்றி வாக்குத்தத்தம் செய்து 430 ஆண்டுகள் ஆன பிறகு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இடையிலே வந்தது இடையிலே (சிலுவையிலே) நீக்கப்பட்டது. கலா. 3:25-ல் விசுவாசம் வந்த பின்பு உபாத்திக்கு கீழாக நாம் இருக்க வேண்டிய அவசிய மில்லையே.

நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தேவனோடு புதிய உடன்படிக்கை செய்து கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் தேவனுடைய பரலோகத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவுக்குள் பெற முடியும். இப்படியிருக்க நீங்கிப் போன பழைய உடன்படிக்கையை நாம் இன்றைக்கு கை கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிறார். பழைய ஏற்பாட்டில் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அதிகமாக சொல்லப்பட்டிருப்பதால் அதை பூமிக்குரிய மக்களுக்கு காண்பித்து அவர்களை தங்கள் பக்கம் இழுத்து அதிகமான மக்கள் கூட்டத்தை காண்பிக்க நாமகரண ஊழியர்கள் வசதியாக அதை பயன்படுத்து கிறார்கள். ஆகையால், ஆவிக்குரிய உலகம் குறுகலாகவே உள்ளது. இது தேவனுடைய சித்தமாகவும் உள்ளது (மத். 7:13,14). அடுத்த மாதம் தொடர்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!.

## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம்-32.

# தவறோடு ஒத்துப்போகுதல்

**Bro. K. பாஸ்கர்**

அருமையான திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் நமது இரட்சிப்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல.

### I தவறோடு ஒத்துப்போகுதல் என்றால் என்ன?

தவறோடு ஒத்துப்போகுதல் என்றால் தங்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து தவறு செய்பவர்களுடன் ஐக்கியமாயிருப்பது. இதற்கு ஆங்கில வார்த்தை என்பதாகும். (காம்ப்ரமைஸ்) பரிசுத்த வேதாகமத்தில் இந்த வார்த்தை யின் அடிப்படையில் பல வேத வசனங்கள் தவறு செய்பவர்களைக் கூறுகின்றது. அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. விக்கிரக ஆராதனையும், அதைச் சார்ந்த ஜோசியம் பார்த்தல், நாள் பார்த்தல், குறி கேட்டல், அஞ்சனம் பார்த்தல், செத்தவனிடத்தில் குறிகேட்டல், சூனியம், மந்திரவாதம் போன்ற காரியங்களுக்கு விலகியிருக்க வேண்டும். (உபா. 18:10,12)

2. இப்படிப்பட்ட அவிசுவாசிகளுடன் திருமண ஒப்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்பீர்களாக நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசி யுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும், விக்கிரகங் களுக்கும் சம்பந்தமேது? (2 கொரி. 6:14,18).

3. கள்ளப் போதகருக்கு விலகியிருக்க வேண்டும். விக்கிரக ஆராதனையை போதிக்கும் போதகருக்கும், மனிதனுடைய உபதேசத்தைப் போதிக்கும் போதகருக்கும் கிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிக்காத போதகருக்கும் விலகியிருக்க வேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளும், ஜனங்களுக் குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர் இருப்பார்கள் (2 பேதுரு 2:1).

4. விபசாரம், வேசித்தனத்திற்கு விலகியிருக்க வேண்டும். (அப். 15:20) இப்படிப்பட்டப் பாவங்களும் இதைவிட இன்னும் அநேக தவறுகளும் இவ்வுலகத்தில் இருக்கிறது. அதிலும் குறிப்பாக துன்மார்க்கத்திற்கேதுவான மதுபானமும், விபசாரமும் இன்றைய நாளிலே அநேகரையும், விசுவாசிகளில்

சிலரையும் மயக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட பாவங்களுக்கு உடன் படாமல் உன்னைச் சுத்தவானாக்க காத்துக்கொள். (1 தீமோ. 5:22)

## II தவறோடு ஒத்துப்போகாமல் வாழ்ந்தவர்களின் உதாரணம்

கடல் நீரில் உயிர் வாழும் எல்லா மீன்களும் கடல் நீரின் உப்பு தங்களுக்குள் இல்லாமல் வாழுகின்றது. அதுபோல, தேவனுடைய பிள்ளைகளும் கடல் போன்ற இவ்வுலக்தில் வாழும்போது இவ்வுலகத்தில் காணப்படுகின்ற பாவங்களுக்கு உடன்படாமல் இருக்க வேண்டும். அப்படி வாழ்ந்த தேவனுடைய பிள்ளைகளான நோவா என்ற தேவதாசனும், லோத் என்ற தேவதாசனும் நமக்கு உதாரணமாக உள்ளனர்.

இந்த இரண்டு தாசர்களும் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்தவர்கள். நோவா காலத்தில், அதாவது கி.மு. 2948–1998ல் ஜனங்களுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர் நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல் மனுஷன் முதற்கொண்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன் நான் அவைகளை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி. 6:5,8) அக்கிரமம் பெருகியிருந்த அந்த நாட்களில் தேவனுடைய கிருபையை முதலில் பெற்றுக் கொண்டவர் நோவா. ஏனென்றால், நோவா இவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான் நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவர் தேவனுடைய நீதியைப் பிரசங்கித்து வந்தார். (ஆதி. 6:8,9; 2 பேதுரு 2:5) அவர் ஜனங்களை மனந்திரும்பும்படி பிரசங்கித்தார். ஜனங்களோ தங்களின் தவறான காரியங்களிலிருந்து மனந்திரும்பவில்லை. தேவனுடைய வசனத்திற்கு செவி கொடுக்கவில்லை. அவர்கள் புசிக்கவும், குடிக்கவும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் வந்தனர். அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கு ஒத்துப்போகாமல் இருந்தார். தேவன் சொன்னபடி ஜலப்பிரளத்தினால் கீழ்ப்படியாத ஜனங்களை அழித்தார். நோவாவையும் அவர் குடும்பத்தினரையும் நோவாவோடே இருந்த மிருக ஜீவன்களையும் காப்பாற்றினார். எல்லாம் பேழைக்குள் காக்கப்பட்டன. (ஆதி. 7:13,17; 2 பேதுரு 2:5) தவறு செய்தவர்கள் அழிக்கப்பட்டனர். தவறோடு ஒத்துப் போகாமல் தேவனுக்குக் கீழ்ப்படிந்த நோவா குடும்ப உறுப்பினர் எட்டு பேர் மட்டும் காப்பாற்றப்பட்டனர்.

அதன்பின்பு இருநூறு ஆண்டுகள் கழித்து, அதாவது சுமார் கி.மு. 1800ம் ஆண்டு காலத்தில் லோத் என்ற தேவதாசன் சோதோம், கொமோரா என்ற இரட்டைப் பட்டணங்கள் அருகே அதாவது யோர்தான் பள்ளத்தாக்கிலே

வாழ்ந்தார். அந்தப் பட்டணங்களின் ஜனங்களோ பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாயிருந்தார்கள் (ஆதி. 13:13) அவர்களுக்குள் வாழ்ந்த லோத் என்ற தேவ மனிதர் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு, நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத் அவர்களுடைய காமவிகார நடக்கைகளுக்கு ஒத்துப் போகாமல் நீதிமானாக வாழ்ந்தார். ஆதலால், தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டார். (ஆதி. 19:19) அந்தப் பட்டணங்களின் மீது அக்கினியையும், கந்தகத்தையும் வானத்திலிருந்து வருஷிக்கப் பண்ணி அக்கிரமக்காரரை அழித்துப் போட்டார். தேவ பக்தியுள்ள மனிதர் லோத் அந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார் (2 பேதுரு 2:6-8).

இந்த இரண்டு சம்பவங்களும் நமக்கு போதனையாக எழுதப்பட்டிருக்கிறது (ரோமர் 15:4) இந்தக் கடைசிக் காலத்தில் நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது (1 கொரி. 10:11) இந்த தேவ எச்சரிப்பைப் படித்து, விக்கிரகங்களுக்கும் அதைச் சார்ந்த மூடப்பழக்கங்களுக்கு ஒத்துப் போகாமலும், அவிசுவாசியுடனே திருமண ஒப்பந்தம் செய்யாமலும் எல்லா சபைகளும் ஒன்று தான் என்று போதிக்கும் கள்ளப் போதகருக்கு ஒத்துப் போகாமலும், விபசாரம், வேசித்தன பாவங்களுக்கு ஒத்துப்போகாமலும் விலகியிருப்போம்.

## III தவறோடு ஒத்துப்போவதால் ஏற்படும் விளைவுகள்

இன்றைய நாளிலே அக்கிரமங்களும், பாவங்களும், காமவிகாரங்களும் மிகவும் அதிகமாகவே உள்ளதாக தினமும் செய்தித்தாள்களில் அசிங்கம் அசிங்கமாக வருகின்றன அவைகளையெல்லாம் இங்கே குறிப்பிட முடியாது. இப்படிப்பட்ட பாவங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தேவ நீதி கூறுகின்றது (2 கொரி. 10:6) ஆனால், இப்போது கிருபையின் நாட்கள் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9). தேவனுடைய நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள் (2 பேதுரு 3:15) அதாவது, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாரும் மனந்திரும்பி வசன ரீதியாக செயல்படும் கிறிஸ்துவின் சபையில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள் நோவாவைக் காப்பாற்றின பேழை இன்று உலக அழிவிலிருந்து கிறிஸ்துவின் சபை ஒன்றே உங்களைக் காப்பாற்ற தேவன் வைத்திருக்கின்றார். இந்த சபையானது கரை, திரை, ஒன்றுமில்லாமல் பரிசுத்தமாக இருக்கிறது (எபே. 5:27) இவ்வுலக பாவ அசுத்தங்களுக்கு விலகி பரிசுத்தமாக இருக்கவே அழைக்கிறார் (1 தெச. 4:7).

தவறோடு ஒத்துப்போவது என்பது எல்லாரிடமும் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகளானாலும் தேவன் நியாயந்தீர்ப்பார். உதாரணமாக, கொரிந்து பட்டணத்திலிருந்து தேவனுடைய பிள்ளைகளில் சிலர் தவறு செய்திருக்கிறார்கள். அந்த சபையார் அதைக் கண்டு கொள்ளாமல் தவறோடு ஒத்துப்போனார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது

உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே .... இப்படிப்பட்டக் காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களை விட்டு நீக்காமலும், துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கறீர்கள் என்று எழுதினார். (1 கொரி. 5:1,2) இதன் விளைவைக் குறித்து பவுல் எழுதும் போது கொஞ்சம் புளித்த மா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்கும் என்று அறியீர்களா? (1 கொரி. 5:6) அதாவது, சபையில் ஒருவர் இன்னொரு சகோதரனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருந்தால் சபையார் அதைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் போது சபை முழுவதும் அசுத்தமாகிவிடும் என்று பவுல் உணர்த்துகிறார். மேலும், மனுஷன் செய்யும் எந்த பாவமும் சரீரத்திற்குப் புறம்பாக இருக்கும் வேசித்தனம் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறான். பாவத்தின் சம்பளம் மரணம் (1 கொரி. 6:18; ரோமர் 6:23).

மேலும் ஆசியாவிலிருந்த ஏழு பட்டணங்களிலுள்ள சபைகளில் சிலர் தவறோடு ஒத்துப்போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்தி அதிலிருந்து மனந்திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் நான் வரும்போது மனந்திரும்பாதவர்களைத் தண்டிப்பேன் என்று எச்சரிக்கின்றார். (வெளி. 2:12,14–16) ஆகவே, தவறும், தவறோடு ஒத்துப் போவதும் தண்டனைக்குரியதாக இருக்கிறது. உலகிலுள்ள அனைத்து மக்களும் தேவ எச்சரிப்புகளை எண்ணி தவறும், தவறோடு ஒத்துப் போவதையும் விட்டு, விட்டு தேவனிடம் மனந்திரும்புங்கள். மனந்திரும்புகின்ற ஒரே பாவியினி மித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கிறது (லூக். 15:7). கிறிஸ்துவின் சபையார் மனந்திரும்ப அவசியமில்லாத பாவிகளை விட்டு விலகி பரிசுத்தமாக இருங்கள். இயேசு கிறிஸ்து தமது வருகையில் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையை தமக்கு முன்பாக நிறுத்திக் கொள்வார் (எபே. 5:27).

**(தொடரும்)**

## நாளும், நடப்பும்

1. உணவுப்பாதுகாப்பு மசோதாவை அமல்படுத்த அவசரச் சட்டம் - மத்திய அரசு ஒப்புதல்
2. டீசல் விலை உயர்த்தப்பட்டிருந்தாலும் ரயில் கட்டணம் உயராது - ரயில்வே அமைச்சர்
3. ஐரோப்பிய யூனியன் அமைப்பில் குரேஷியா புதிய உறுப்பினராக இணைந்துள்ளது.
4. தண்டனை பெறும் எம்.பி., எம்.எல்ஏ.க்கள் தகுதி நீக்கம் - உச்ச நீதிமன்றம் தீர்ப்பு
5. அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.
6. அரசு மருத்துவமனைகளில் நவீன மருத்துவ வசதிகளுக்காக ரூபாய் 43 கோடி நிதி ஒதுக்கீடு - தமிழக அரசு.
7. முத்தரப்புத் தொடர் இறுதி ஆட்டம் இந்தியா - கோப்பையை வென்றது.


# ஜூன் மாதத்தில் நடந்த நற்செய்திக் கூட்டங்கள்
## Gospel Meetings Held in the Month of June




திருப்பூரில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி




ஈரோட்டில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி



சென்னிமலையில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி



சேலத்தில் நடந்த நற்செய்தி கூட்டத்தின் ஒரு பகுதி




Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.